**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 61/2019**

**பி.வா.சா.1**

**திருமதி. லதா**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு தொடர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்)**

வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள கதவு எண். 84, 86 வார்டு T.S.No. 74 15 ½ செண்ட் சொத்தானது கோபிசெட்டிபாளையம் கச்சேரிமேட்டில் உள்ள சொத்து என்றால் சரிதான். மேற்படி கட்டிடத்தில் JDC துணிக்கடை, வழக்கறிஞர்கள் அலுவலகம், மருத்துவ ஆய்வுக்கூடம், கலர் பிரிண்டிங் ஜெராக்ஸ் போன்ற பல கடைகள் உள்ளது என்றால்சரிதான். அதிலிருந்து மாத வாடகையாக ரூ.2 லட்சம் பெற்று வருகிறேன் என்றால் இல்லை ரூ.60 ஆயிரம் பெற்று வருகிறேன். சில சமயங்களில் வாடகைதாரர்கள் காலிசெய்து விடுவார்கள். தற்போது கடைகள் எதுவும் காலி இல்லை அனைத்திலும் வாடகைதாரர்கள் உள்ளார்கள் என்றால் ஆமாம். என் மாமனார் 2000 ம் ஆண்டு மேற்படி கடைகளை கட்டி பராமரித்து வந்தார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு நானும், என் கணவரும் பராமரிக்கிறோம் என்றால் சரிதான். வாடகை முழுவதையும் நானும், என் கணவரும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி கட்டிடத்தின்

வாடகையை ரொக்கமாக பெற்றுக்கொள்வேனா அல்லது வங்கி பர்வர்த்தனை மூலமாக பெற்றுக்கொள்வேனா என்றால் வங்கியில் போடுவார்கள். சில கடை வாடகைதாரர்கள் ரொக்கமாக கொடுப்பார்கள். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 21வது பத்தியில் என் பெண் மக்களை தாவாவில் சேர்க்காமல் தாவாவை நடத்தி வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் என் 2 மகள்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். என் கணவர் கட்டிய சுப்புராம் மகாலில் எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் தற்போது மாதம் ரூ.50 ஆயிரம் வருகிறது. மேற்படி கட்டிடத்தில் தற்போது பனியன் கம்பெனி உள்ளது என்றால் சரிதான். மேற்படி கம்பெனியில் 100 நபர்களுக்கும் மேல் வேலை செய்வார்கள் என்றால் சரிதான். மேற்படி கட்டிடத்தின் வாடகையை ரொக்கமாக பெற்றுக்கொள்வேனா அல்லது வங்கி பர்வர்த்தனை மூலமாக பெற்றுக்கொள்வேனா என்றால் வங்கியில் போடுவார்கள். என் கணவர் உயிருடன் இருக்கும்போது மேற்படி 2 சொத்துக்களின் வாடகைகள் வங்கி மூலமாக பெற்றாரா அல்லது ரொக்கமாக பெற்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றும், என் கணவர் வங்கி மூலமாகத்தான் பெற்றார் அதை ஒத்துக்கொண்டால் என் வழக்கிற்கு பாதகமாக ஆகிவிடும் என்பதால் தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஈரோட்டில் என் மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் காம்ப்ளக்ஸ் கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கட்டிடத்திலிருந்து ரூ.1லட்சம் மாத வாடகை வருமா என்றால் இல்லை தற்போது தான் ரூ.40 ஆயிரம் வருகிறது முன்பு எவ்வளவு வந்தது என்று சரியாக தெரியாது. என் மாமனார் காலமான பின்னிட்டு நானும், என் கணவரும் தான் தொகையை

அனுபவித்து வருகிறோம் என்றால் ஆமாம். மேற்படி கட்டிடத்திற்கு அருகில் தான் என் கணவருக்கு 4 ¼ சென்ட் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4 ¼ சொத்து ஒதுக்கப்பட்டது என்றும், அது எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. வாதிக்கு மேற்படி கட்டிடத்திறகு பின்புறம் அவரது பாட்டியின் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது என் கணவர்தான் கொடுத்ததாக தெரிந்துகொண்டேன் அதனை வாதி விற்பனை செய்து விட்டார். மேற்படி வாதிக்கு கொடுக்கப்பட்ட சொத்திற்கு முன்புறமுள்ள சொத்து என் கணவருக்கு ஒதுக்கப்பட்டது அதை என் கணவர் முதலில் விற்பனை செய்தார் என்றால் தெரியாது. என் கணவர் உயிருடன் இருந்தவரை வாதி தனக்கு சொத்து எதுவும் வேண்டாம் என்று எனக்கு தெரிந்து சொன்னதில்லை என்றால் சரியல்ல அதை பற்றி எனக்கு தெரியாது என்னை எப்போதும் அவர்கள் பேச்சுவார்த்தையில் சேர்த்ததில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளவாறு வாதி தொகை பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி என் கணவருக்கும், என் மாமியாருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ.26,90,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் வாதிக்கு ரூ.1லட்சம் தான் சொற்ப பணம் ஒதுக்கியதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. மேற்படி வாதிக்கு சொற்ப பணமாக கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது பொய்யாக குறிப்பிடப்பட்டது என்றால் சரியல்ல. அவர்களுக்குள் என்ன பரிவர்த்தனை ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது ஆனால் தொகை கொடுக்கப்பட்டது. நான் பொய்யான

சங்கதிகளை வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி 26-12-2006 ஆவணத்தில் அடமானத்திற்காக என்று தான் கையெழுத்து போட்டார் பாகப்பிரிவினைக்காக கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. அடமானத்திற்கான பத்திரம் என்று என் கணவர் அழைத்துசென்று பாகப்பிரிவினை என்று பதிவு செய்துகொண்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் விட்டு சென்ற வழக்குகளை நானும், என் மகள்களும் தொடர்ந்து நடத்தி வந்தோம் என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட வயலை நான் குத்தகைக்கு விவசாயம் செய்து வந்தேன். உண்மையில் என் கணவருக்கு கடன் தொகை அதிகமாக இருந்ததால்தான் சொத்தினை அடமானம் வைத்து கடன் பெறவேண்டும் என்று வாதியை என் கணவர் அழைத்துசென்றார் என்றால் சரியல்ல. என் கணவரிடமும், அவரது தாயாரிடமும் வாதி பலமுறை சொத்தை பாகம் பிரிக்க கேட்டுக்கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவரிடமும், அவரது தாயாரிடமும் வாதி சுமூகமான உறவு தான் வைத்திருந்தார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பற்றி வாதி கேட்டுக்கொண்டதற்கு பின்னிட்டுதான் அவர்களுக்குள் சுமூகமான உறவு அற்றுபோய் விட்டது என்றால் சரியல்ல. என் மாமனார் இறந்த பின்னிட்டு ஒவ்வொரு சொத்திலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறது என்று என் கணவர் குறித்து வைத்திருக்கவேண்டும் என்றும், வேண்டுமென்றே குறித்து வைக்காமல் விட்டுவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும் என்றும், இந்த வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமனார் இறந்தபின்னிட்டு வாதியும் தாவா சொத்தின்

கூட்டு பங்குதாரர் என்றும், அவருக்கும் சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தில் கூட்டு பங்குரிமை உள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றும், கன்னடம் மட்டும் தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமானது செல்லக்கூடிய ஆவணமல்ல என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் ஒரு பகுதி சொத்தை என் மாமியாருக்கு ஆயுட்காலம் வரை கொடுத்தும், அவரது மறைவுக்கு பின்னிட்டு சொத்துக்கள் என் கணவருக்கு சென்றடையவேண்டும் என்று வேண்டுமென்றே எழுதிக்கொண்டார் என்றால்சரியல்ல. எனவே மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் தற்போது வரை பெற்று வரும் வருமானத்தில் வாதிக்கும் பங்குள்ளது என்றால்சரியல்ல. வாதிக்கு 4 கோடி மதிப்பிலான ஆபரணங்கள் கொடுக்கப்பட்டது என்று காண்பிக்க ஆவணம் எதுவுமில்லை என்றால் சரிதான். உறவினர்கள் மூலம் பிரித்துக்கொடுக்கப்பட்டது. அவ்வாறு உறவினர்கள் மூலம் பிரித்து கொடுத்ததாக நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 12-03-2019 தேதிக்கு முன்பாகவே தனக்கு பாகம் வேண்டும் வாதி கேட்டார் என்றால் தெரியாது. வாதியின் கோரிக்கையை முறியடிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் 12-03-2019 தேதியில் என் கணவரும், நானும், என் மக்களும் ஒரு ஆவணத்தை உருவாக்கிக்கொண்டோம் என்றால்சரியல்ல. மேற்படி ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். எங்களது நல்லெண்ணத்தை காட்டியிருந்தால் 12-03-20119 தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எங்களது

போலித்தனமான எண்ணம் தெரிந்தும் விடும் என்பதால் தான் அதனை தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டபடி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 12-03-2019 தேதியிட்ட ஆவணங்கள் சட்டப்படியான செல்லத்தக்க ஆவணங்கள் அல்ல, ரத்து செய்யத்தக்க ஆவணங்கள் என்றால் சரியல்ல. என் கணவரின் ஓட்டுநர் மகேஷ் என் கணவரும், நானும் கூறும் அனைத்து வேலைகளையும் செய்வார் என்றால் சரிதான். என் கணவரும், மேற்படி மகேஷ் என்பவரும், மற்றவர்களும் சேர்ந்து வா.சா.ஆ.1 ஆவணத்தை போலியாக தயாரித்து அடமான பத்திரம் என்று பதிவு செய்துகொண்டார்கள் என்றால் சரியல்ல.